பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 05 2026 SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறைப்பயணமாக ஸ்வீடன் சென்றடைந்தார்.

2. வடிவமைப்புத் துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 9 கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4. யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Shriyanshi Valishetty** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

. . இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, நெதர்லாந்தில் அரசுமுறைப்பயணத்தை முடித்துக்கொண்டு ஸ்வீடன் சென்றடைந்தார்.

**Gothenburg** சென்றடைந்த பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக ஸ்வீடன் சென்றுள்ள திரு நரேந்திர மோடி, அந்நாட்டு பிரதமர் திரு **Ulf Kristersson-**னுடன் இன்று பேச்சு நடத்துகிறார்.

இதனைத் தொடர்ந்து இரு தலைவர்களும் ஐரோப்பிய தொழில்துறை ஏற்பாடு செய்துள்ள கூட்டத்திலும் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தேசிய வடிவமைப்பு மையம், வடிவமைப்பாளர்களுக்கு உரிய வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் உள்ள தேசிய வடிவமைப்பு மையத்தில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான பிரிவினை தொடங்கிவைத்து மாணவர்களோடு அவர் கலந்துரையாடினார்.

உலக அளவில் வடிவமைப்புத்துறை வளர்ச்சி கண்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை கருத்தில்கொண்டு தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதற்கான

நடவடிக்கைகளை தேசிய வடிவமைப்பு மையம் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

நக்சலைட் பிரச்சினைகளுக்கு முற்றுபுள்ளி வைக்கப்பட்டிருப்பதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தொலைநோக்கு பார்வையுடன் மேற்கொண்ட நடவடிக்கையே காரணம் என்று தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று காந்தி நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தெளிவான திட்டமிடல் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதற்கு இதுவே சான்றாகும் என்று குறிப்பிட்டார்.

அரசு திட்டங்கள் செயலாக்கத்திலும், தேர்தல்களிலும் திரு அமித் ஷா துல்லியமாக திட்டமிட்டு வெற்றியை ஈட்டித்தருவதாகவும் அவர் கூறினார்.

நக்சலைட் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சித திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<>>>>>

ரயில்வேத் துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

பெங்களூரு — மும்பை இடையே படுக்கை வசதியுடன் கூடிய வந்தேபாரத் ரயில் சேவை விரைவில் தொடங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பெங்களூரு — மும்பை இடையேயான விரைவு ரயில் சேவையை இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இதன்மூலம், கர்நாடக மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் கர்நாடக மாநிலத்தில் 61 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதற்காக 2 ஆயிரத்து 160 கோடி ரூபாய நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் ஒன்பது ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பெங்களூரு கண்டோன்மண்ட் ரயில் நிலையம் 485 கோடி ரூபாய் செலவிலும், யஷ்வந்தபூர் ரயில் நிலையம் 367 கோடி ரூபாய் செலவிலும் மேம்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கர்நாடகாவில் மட்டும் கடந்த 12 ஆண்டுகளில் ஆயிரத்து 700 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய ரயில் தடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

விமான எரிபொருளுக்கான மதிப்புக்கூட்டு வரியை தில்லி அரசு குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது என்று சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், விமான எரிபொருளுக்கான மதிப்புகூட்டு வரியை 25 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக தில்லி அரசு குறைத்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற ஆக்கப்பூர்வமான அரசின் செயல்பாடுகள் மக்களுக்கு உதவிடும் என்று திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

<<<<<>>>>>

அடல் ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை ஒன்பது கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நடப்பாண்டில் மட்டும் ஒரு கோடியே 35 லட்சம் பேர் இந்த திட்டத்தில் இணைந்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் பயனாளிகள் 60 வயது பூர்த்தி அடைந்த பின்னர் மாதந்தோறும் அவர்களுக்கு ஆயிரம் முதல் ஐந்தாயிரம் ரூபாய் வரை ஓய்வூதியம் கிடைக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கேரளம் முதலமைச்சராக பதவியேற்க உள்ள திரு V D சதீசன் அம்மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து பேசினார்.

திருவனந்தபுரத்தில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பேரவைத் தலைவராக திரு திருவாங்கூர் ராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அவர் கூறினார்.

அமைச்சர்கள் பட்டியலையும் அவர் வெளியிட்டார்.

திரு ரமேஷ் சன்னிதாலா, திரு சன்னி ஜோசப், திரு முரளிதரன் உள்ளிட்டோர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

கேரளத்தில் திரு V D சதீசன் தலைமையிலான அமைச்சரவை நாளை பதவியேற்கிறது.

<<<<<>>>>>

தெலங்கானாவில் ஆளும் காங்கிரஸ் அரசு விவசாயிகளின் நலனில் அக்கறையின்றி செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியளார்களிடம் பேசிய அவர், நேரடி நெல் கொள்முதலின் பலன்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு தடையாக தெலங்கானா அரசு உள்ளது என்று குறை கூறினார்.

கொள்முதலுக்கான அனைத்து செலவினங்களையும் மத்திய அரசு ஏற்பதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும், கொள்முதல் நடவடிக்கைகளை தெலங்கானா அரசு காலதாமதம் செய்வதாக திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<>>>>>

வடகிழக்கு கட்டமைப்பு உச்சிமாநாடு மற்றும் கண்காட்சி மேகாலயாவில் அடுத்த மாதம் 11 மற்றும் 12-ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு **Conrad Sangma,** கடந்த ஐந்தாண்டுகளில் மேகலயாவின் பொருளாதாரம் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக கூறினார்.

முதலீடுகளும் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் மாநிலமாக மேகாலயா திகழ்கிறது என்றும் திரு **Conrad Sangma** கூறினார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் பள்ளி கட்டமைப்பு வசதிகள் வெகுவாக மேம்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்ரச் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற பகுதிநேர ஆசிரியர்களுக்கான பாராட்டு விழாவில் பங்கேற்று அவர் பேசினார்.

பள்ளிக்கல்வித்துறையின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

மாநிலம் முழுவதும் **96** சதவீத பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவம் திரு யோகி ஆதித்யநாத் தெரிவித்தார.

<<<<<>>>>>

தொழிலாளர் நலனுக்கான புதிய சட்டங்கள் மகளிருக்கு பயனளிக்கும் வகையில் உள்ளதாக தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி **Vijaya Rahatkar** கூறியுள்ளார்.

இன்று ஸ்ரீநகரில் மகளிர் மேம்பாடு தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மகளிருக்கு சம உரிமை, பாதுகாப்பு மற்றும் உரிய மரியாதையை இந்த புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அயோத்தியா, தில்லி, மும்பைக்கு பிறகு இத்தகைய மாநாடு ஸ்ரீநகரில் நடைபெறுவதாக அவர் கூறினார்.

மகளிர் பாதுகாப்பு குறித்து இந்த மாநட்டில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக திருமதி **Vijaya Rahatkar** தெரிவித்தார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரசேத்தில் நேரிட்ட சாலை விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

**Hamirpur — Mahoba** இடையேயான தேசிய நெடுஞ்சாலையில் **Chhirka** அருகே காரும் — லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

நாட்டின் மின் கட்டமைப்பு வலுவடைந்து வருவதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், ஓரே நாளில் 256 புள்ளி நான்கு ஜிகாவாட் மின் தேவை பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் 33 சதவீதம் புதுப்பிக்கதக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில இது முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது.

மாஸ்கோவை குறிவைத்து யுக்ரைன் இந்த ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளதாக ரஷ்யாவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

யுக்ரைனின் 81 ட்ரோன்களை ரஷ்யா சுட்டு வீழ்த்தியதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் யுக்ரைன் இந்த ட்ரோன் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Shriyanshi Valishetty** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------

குஜராத்தின் காந்தி நகரில் நடைபெற்ற ஆசிய பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒன்பது வெண்கலப்பதக்கங்களை வென்றது.

----------------

ரோமேனியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா முதலிடத்தில் உள்ளார்.

---------------

இந்தியா — ஆஸ்திரேலியா இடையே 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவு இரண்டாவது ஹாக்கிப் போட்டி தற்போது போபாலில் நடைபெற்று வருகிறது.

------------

பிரான்ஸில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 4 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

---------------

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

**<<<<<END>>>>>**